# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார்

வணிக மாத இதழ்

Volume: 12 | Issue : 04 | JULY 2023 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE




SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

SCC Trade Fair 2023

## ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்

நடத்தும்

## மாபெரும் தொழில் வர்த்தக கண்காட்சி

இணைந்து வழங்குபவர்

SOWBHAGYAAS சௌபாக்கியாஸ் ஜுவல்லர்ஸ்

நாள் : ஆகஸ்ட் 4,5 & 6 - 2023 வெள்ளி, சனி & ஞாயிறு

இடம் : V.S. செல்லம் சரஸ்வதி மாளிகை A/c - மதுரை

அனுமதி இலவசம்



To




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

## சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



METRO



அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

**PH : 23322364, 2331297, 4382343**



---

TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems




---



Prop.: B.S. Rajan

- CCTV Camera
- Long Distance Monitor
- Security Alarm
- Digital Video Recorder
- Voice Records
- Access Control System
- Firm Alarm
- Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

## A TO Z CCTV SYSTEMS

CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

---

**உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

**ஆலோசனை பெற அணுகவும்**

**L.N.R. தாமோதரன் - 98431 71477**



# தலைவர் அறிக்கை

அஸ்கிதெ ஜ்கோ மொன்னு பொரெ

**நமஸ்கார்...**

T.R.மோகன்ராம்
தலைவர்

நமது சௌராஷ்ட்ர சேம்பர்–ன் தொழில் வர்த்தக கண்காட்சி வருகின்ற ஆகஸ்ட் 04, 05 & 06 (வெள்ளி, சனி & ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இந்த வர்த்தக கண்காட்சியில் பல தரப்பட்ட தொழில் பிரிவினர்களின் ஸ்டால்கள் இடம்பெருகின்றன. பொதுமக்களின் தேவைக்கும், தொழில் பிரிவினர்களின் தேவைக்கும் ஏற்ப ஸ்டால்கள் இருக்கும். மொத்தம் 71 ஸ்டால்கள் இடம்பெருகின்றன. வர்த்தக கண்காட்சி நடைபெறும் இடம் முற்றிலும் குளிரூபட்டவை. நம் சமூக மக்கள் அவசியம் கலந்து கொண்டு ஆதரவைத் தர வேண்டுகிறோம். அனைவரும் குடும்பத்துடன் பங்கேற்க அழைக்கிறோம்.

கடந்த ஜுன் மாதம், உலக தமிழ் தொழில் வர்த்தக அமைப்பும், மலேசிய அமைச்சகமும் இணைந்து நடத்திய தொழில் வர்த்தக கருத்தரங்கில் கலந்து கொள்ள நமது சேம்பருக்கு அழைப்பு வந்ததை ஏற்று, ஆர்வமுள்ள சேம்பர் அங்கத்தினர்களுடன் சேம்பர் நிர்வாகிகளும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதனால், வெளி நாட்டு தொழில் வாய்ப்புகளை பெறவும், தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளவும் முடிந்தது என பங்கேற்றவர்கள் கூறியுள்ளனர். அதோடு, மலேசிய நாட்டின் தொழில் அமைச்சகத்துடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து இரு நாட்டின் தொழில் அபிவிருத்திக்காக சேம்பர் செயல்படுவதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளது. இதன் அந்நாட்டு அமைச்சகம் வரவேற்று தேவையான உதவிகளை செய்வதாக கடிதமும் அனுப்பியுள்ளது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இந்த முயற்சியை மேற்கொண்ட முன்னாள் தலைவர் திரு. கே.கே.ஜி. பிரபாகரன் மற்றும் துணைத் தலைவர் திரு. கே.கே. தினேஷ் ஆகியோரை நமது சேம்பர் பாராட்டுகிறது. இதற்கு உதவியாக செயல்பட்ட வெளிநாட்டு தொடர்புகுழு சேர்மன் திரு. வி.ஜி. ராம்தாஸ் அவர்களை இந்த தருணத்தில் நினைவுகூருகிறது.

SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |
| **EC Members** | **Team-Chairmen** | **Contact** |
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |


| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. குபேந்திரன்

**20.06.2023** – ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் 8வது செயற்குழு கூட்டம் ஸௌ. சேம்பரில் நடைபெற்றது. இதில் சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**27.06.2023** – மலேசியாவில் நடைபெறும் தொழில் வர்த்தக கருத்தரங்கிற்கு சேம்பர் சார்பாக முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். மலேசிய தொழில் வர்த்தக அமைப்புகளுடன் தொடர்பில் இருக்க நமது சேம்பர் கடிதமும் அனுப்பியது.

**01.07.2023** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர், நன்கொடையாளர் திரு. K.R. ஸ்ரீதர் அவர்களின் இல்ல விழாவிற்கு சேம்பர் குழுவினர் பங்கேற்று சிறப்பித்தனர்.

**04.07.2023** – **Business Manthras** என்கிற தலைப்பில் நடைபெற்ற ஜூலை மாத கூட்டத்தில், சிறப்பு விருந்தினராக S.V. புட்ஸ் நிறுவன பங்குதாரர் திரு. S.V. சூரஜ் சுந்தர சங்கர் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

**04.07.2023** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. பன்சிதர் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழாவில், சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

**05.07.2023** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் மற்றும் சிறப்பு அழைப்பாளர் திரு. N.R.R. கோபி அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழாவில், சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

வருகின்ற ஆகஸ்ட் 04,05 & 06 (வெள்ளி, சனி & ஞாயிறு) மூன்று நாட்களுக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் தொழில் வர்த்தக கண்காட்சி **SCC Trade Fair 2023** என்ற பெயரில் நடத்துகிறது. சேம்பர் அங்கத்தினர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் இந்த வர்த்தக கண்காட்சியில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுகிறோம். நம் சமூக மக்கள் பலர் தங்கள் தயாரிப்புகளை இடம்பெறச் செய்கின்றனர். பல்வேறு துறைகளில் நம் சமூக மக்கள் இருப்பதை இந்த நிகழ்வின் மூலம் அறியலாம். நாமும் பயன் பெறலாம். அனைவரும் வருக. அனுமதி இலவசம். நன்றி.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்

### வாழ்க்கை

ஒரு புத்தகத்தில் படித்தை தங்களிடம் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த உலகத்தில் இரண்டு பேர்கள் தான். பிடித்தவர்கள், பிடிக்காதவர்கள். உங்கள் வாழ்க்கையில் பிடித்தவர்களோடு செலவிடுங்கள், அது உங்கள் மனதை ஈரப்படுத்தும். பிடிக்காதவர்களுடன் ஒரு சில நிமிடம் செலவு செய்யுங்கள், அது உங்களை வீரப்படுத்தும்.

வயிற்றுக்குள் செல்லும் அரிசிக்கும், வாயோடு நிற்கும் அரிசிக்கும் வேறு வேறு அர்த்தம். அதுபோல் தான் வாழ்க்கை. போராடி விட்டுகிற மனிதர்கள் உண்டு. போராடாமல் யோசித்து விடுகிற மனிதர்களும் உண்டு. வாழ்க்கை என்பது சூதாடி பெறுவது அல்ல. போராடி பெறுவது என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

நாம் வாழ்க்கை வாழ்வதற்கு நல்ல நண்பர்கள் தேவை. அதே போல் நல்லவர்கள் கூடுகிற சேம்பர் போன்ற பொது அமைப்புகளில் உங்களை இணைத்துக்கொண்டு தொழிலையும், வாழ்க்கையையும் உயர்த்திக்கொள்ளுங்கள். நன்றி.





Exclusive Showroom for U'r Branded Products

IDEAL innerwear · ANAND · Viking · Prithvi INNER WEARS · NAIDU HALL THE FAMILY STORE · JOCKEY INNER WEAR · Poomex · MANGAI NIGHTIES · RASATHE DARLING NIGHTIES · YOKE'S NIGHTY

& All Branded Innerwears for All

Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.

THE B BABY SHOP அலங்கார் தி பேபி ஷாப்

உள்ளாடைகள் உலகம்

280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402

HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

*Best Compliments from*

# BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

BVK GROUP

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.




எஸ்.வி.எஸ். ஃபுட்ஸ் நிறுவனத்தின், நிர்வாக பங்குதாரர், திரு. S.V. சூரஜ் சுந்தர சங்கர் அவர்கள் பேசுகிறார்

# BUSINESS MANTHRAS

ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் ஜூலை மாத தொழில் வர்த்தக கூட்டம் கடந்த 04.07.2023 அன்று சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. **Business Manthras** என்ற தலைப்பில் பேசுவதற்கு சிறப்பு விருந்தினராக எஸ்.வி.எஸ். ஃபுட்ஸ் நிறுவனத்தின், நிர்வாக பங்குதாரர், திரு. S.V. சூரஜ் சுந்தர சங்கர் அவர்கள் கலந்து கொண்டார்.

சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் மற்றும் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.M. ருபேஷ் பாபு இணைந்து கூட்டத்தை ஏற்பாடு செய்தனர்.

திரு. S.V. சூரஜ் சுந்தர சங்கர் அவர்கள் தனது உரையில், ஒரு தொழில் நிறுவனத்தை நடத்திச் செல்பவர் முதலில், தொழில் தர்மத்தை பின்பற்ற வேண்டும். தொழில் தர்மம் என்பதில் மிக முக்கியமாக, அரசின் விதிமுறைகளைப் பின்பற்றுவது. அதிலும், நம் கணக்குகளை அரசுக்கு வெளிப்படைத் தன்மையுடன் நடத்திச் செல்வது நமது தொழிலை காலத்திற்கும் காலூன்றி நிற்கச் செய்யும் என்றார்.

தொழில் தர்மம் இல்லையெனில், நிதியை கையாளுவதில் தடுமாற்றம் ஏற்படும். நமது தேவையறிந்து செலவு செய்யாமல் இருப்பது, செலவுகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளும் திறனற்ற சூழலை உருவாக்கி தொழிலில் தடுமாற்றத்தை ஏற்படுத்தும். ஆகவே, நிதியை கையாளும் திறனை வளர்த்துக்கொள்ள தொழில் தர்மத்தை அடித்தளமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று கூறினார்.

அடுத்ததாக, ஊழியர்களை கையாளும் திறன் மற்றும் பயிற்சி. இன்றைய தொழிலாளர் பற்றாக்குறையுள்ள சூழலில், தொழிலாளர்களை நமது தொழிலுக்கு ஏற்ப வழிமுறைகளை உருவாக்கி அவர்களை கையாளும் திறன் பெற்றவர்களாக நாம் இருக்க வேண்டும்; நல்ல தொழில் சூழுலை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதாவது, தொழிலாளர்களுக்குத் தேவையான அடிப்படை / பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தல், தொழிலுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்திடல் போன்றவையாகும். இதன் மூலம் உற்பத்தியும் மேம்படுகிறது.

நமது தொழிலின் பொருளையும், சேவையையும் விற்பதை விட, மதிப்பை விற்க வேண்டும். தானாக மற்ற விற்பனை வளரும். மதிப்பை விற்பதற்கு முதலில், நாம் மற்ற நிறுவனத்தின் பொருளைப்பற்றி வாடிக்கையாளரிடம் பேசுவதைத் தவிற்பது மிகவும் முக்கியம் என்றார்.

அடுத்ததாக பொருளின் தரம் பற்றிப் பேசினார். அதில், முதலில் கூறியது போல, நமது பொருளின் தரத்தை அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு நமது பொருளின் தரத்தை அளிப்பது சிறந்தது என்றார்.

தொழில் மேம்பாட்டிற்கு தொழில் தர்மம், நிதி, ஊழியர்கள் மற்றும் பொருளின் தரம் இவைகளே தொழிலை வளர்க்க தாரக மந்திரம் என்று கூறி உரையை நிறைவு செய்தார். அதோடு, கூட்டத்தில் கலந்துகொண்ட அங்கத்தினர்களின் கேள்விகளுக் மிகத்தெளிவாக பதிலளித்தார்.

சிறப்பு விருந்தினர் திரு. S.V. சூரஜ் சுந்தர சங்கர் அவர்களுக்கு சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் நன்றி நிவல, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. அனைவருக்கும் அறுசுவை இரவு உணவு விருந்து அளிக்கப்பட்டது.



# ஜி.எஸ்.டி. பிரச்சனைகளும் தீர்வுகளும்

– தகவல் உதவி
திரு. எக்ஸெல் கே. பழனிச்சாமி, ஜி.எஸ்.டி. ஆலோசகர்

நான் Compliment Bag (PP Non Woven Bag) தயார் செய்கிறேன். பில்-ல் 18% வரியும் போட்டு வசூல் செய்து முறைப்படி அரசுக்கு செலுத்தியும் வருகிறேன். என்னிடம் பை வாங்கும் நிறுவனத்திற்கு ஜி.எஸ்.டி நம்பர் உள்ளது. எனினும், அவர்கள் இந்த Compliment Bag என்பதைச் செலவுக் கணக்கு எழுதுவதால் பில்-ல் தனது ஜி.எஸ்.டி. எண் போட வேண்டாம் என வாய்மொழியாகச் சொல்லிவிட்டனர். அதன்படி நான் பில்-ல் அவர்களது ஜி.எஸ்.டி. எண்-ஐ போடவில்லை. ஆனால் பில்-ல் வரி போட்டு அதனை அப்படியே அரசுக்கு செலுத்தி விட்டேன். என்னிடம் சரக்கு வாங்குபவர் அதனை செலவு கணக்கில் எழுதிவிட்டார். இவ்வாறு 4 வருடங்கள் ஓடிவிட்டன.

திடீரென ஒருநாள் என்னுடைய பார்ட்டிக்கு ஒரு நோட்டீஸ் வந்துள்ளது. (அவர்கள் இந்த கொள்முதலை செலவு கணக்கு எழுதி விட்டதால் 3-பி யில் காட்டவில்லை) அந்த நோட்டீஸ்-ல், பெரும் தொகையை அரசுக்கு ஏமாற்றி விட்டதாகவும் அதனால் வரி, வட்டி, தண்டத் தொகை, இணைக்கத் தொகை ஆகியவை கட்ட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இப்போது எங்களுக்கும் பார்ட்டிக்கும் இடையில் தகராறு வந்துவிட்டது. எங்களது Accountant அவரது Accountant-ஐ குறை சொல்கிறார். அவர்களது Accountant எங்களது Accountant-ஐ குறை சொல்கிறார்.

நடந்து முடிந்ததற்கு என்ன நிவாரணம்? இனி பிற்காலங்ளில் பிரச்சனை வராமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

**தீர்வு:**


தாங்கள் இதனை ஜி.எஸ்.டி.ஆர்.-1ல் ஜி.எஸ்.டி எண், பெயர் ஆகிய விபரங்களை துல்லியமாக வரிசைக்கிரமப்படி ஒன்று விடாமல் கட்ட வேண்டும். தங்களிடம் சரக்கு வாங்குபவர் இதனை செலவுக் கணக்கில் காண்பித்தாலும் முதலில் படிவம் 3-பி -யில் காட்டிவிட்டு பின்பு In-Eligibility ITC (for own use) என்பதாகக் குறிப்பிட்டு ரிட்டன் தாக்கல் செய்தால் பிரச்சனை வராது. ஒரு (+), பின்பு ஒரு (-), அவ்வளவுதான். கணக்கில் காட்டி பின்பு செலவும் எழுதினால் பிரச்சனை இல்லை. நோட்டீஸ் வராது. நோட்டீஸ் வந்தாலும், விளக்கம் கூறி நிரூபிக்கலாம். எனினும், ஏற்கனவே நடந்து முடிந்தவைகளுக்கு, அதனை, செலவுக் கணக்கில் காட்டிய கணக்குப் புத்தகங்களைத் தாக்கல் செய்து உரிய பதில் கொடுத்து நிவாரணம் தேடிக் கொள்ளலாம்.

லாப நட்டக் கணக்கு மற்றும் நாட்குறிப்பு மற்றும் பேரேடு ஆகியவற்றை நேரில் தாக்கல் செய்து, உரிய பக்கங்களின் ஜெராக்ஸ் சமர்ப்பித்தால் நிவாரணம் பெறலாம்.

**சரக்குகளை பல இடங்களுக்கு அனுப்பும் போது அனுசரிக்க வேண்டிய முறைகள்:**

வணிகர் சரக்குகளை விற்பனை செய்து அதனை கொள்முதல செய்பவருக்கு அனுப்பும் போது, விற்பனை பட்டியலையோ அல்லது இதற்காக சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட "Delivery Challan (DC)" பூர்த்தி செய்து சரக்குகளை ஏற்றிச் செல்லும் வண்டியுடன் அனுப்ப வேண்டும். அப்படி இல்லையென்றால், இதற்காக சோதனையில் ஈடுபட்டு வரும் Roving Squad அலுவலர்களால் நிறுத்தப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படலாம். இதனால் டெலிவரியில் தாமதம் ஏற்படும். சரக்குகள் கெட்டுப் போகவும், அபராதம், வரி, முன் பணம், பயணச் செலவுகள் என வணிகத்தில் நட்டம் ஏற்படும். ஆரம்பத்திலேயே சட்டத்தில் உள்ளபடியான வழிமுறைகளைப் பின்பற்றினால், இந்தப் பண நஷ்டத்தையும், மனக் கஷ்டத்தையும் எளிதில் தவிர்க்கலாம். இந்த ஒழுங்கான முறைகளையும் புறக்கணித்து அலுவலர்கள் சட்ட விரோதமாக நடவடிக்கை எடுத்தால் அதனையும் சட்டப்படியே சந்தித்து, நிவாரணம் பெறலாம். இல்லையென்றால் அபராதங்களைச் செலுத்தி அல்லல்பட வேண்டியிருக்கும். இதற்கான ஒழுங்கான வழிமுறைகள் சிலவற்றை காண்போம்.

**பில் அனுப்ப இயலாத சூழ்நிலைகள்:** எக்ஸெல் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் PP Non Woven Bag தயாரிக்கும் நிறுவனம். அந்த நிறுவனத்தில் இருந்து PP Non Woven Cloth என்ற பொருள் 1000மீட்டர் அளவில் பிரிண்டிங் செய்யும் இடமான Vignesh Prints என்ற நிறுவனத்திற்கு பைகளில் பெயர் அச்சிடுவதற்காக அனுப்பப்படுகிறது. இது விற்பனைக்கு அல்ல எனக் குறிப்பிட்டு கீழே உள்ள டெலிவரி செலான் வடிவம்படி தயார் செய்து அனுப்ப வேண்டும். மேலும், பிரிண்டிங் முடிந்தவுடன் இந்த சலானுடன் பிரிண்டிங் சப்ளையரின் கூலி பில் இணைத்து அனுப்ப வேண்டும்.



மாடல் DC எண் 1

DELIVERY CHALLAN

(for sale / stock transfer / works contract / labour)

Original - White
Duplicate - Blue
Triplicate - Red
Quadruplicate - Yellow

GST :33xxxxxxxxxxxx

Ass. Year :

| | | |
|---|---|---|
| SL.No : 1 | 1. (a) Name and address of the consignor | எக்ஸெல் இண்டஸ்ட்ரீஸ் (HO) 18.டவுன்ஹால் ரோடு. மதுரை - 625 001 (சரக்கின் உரிமையாளர்) |
| (b) GSTN : | | GSTN : 33xxxxxxxxxxxx |
| 2. (a) Name and address of the consignee / branch / agent | | -NA- |
| (b) GSTN, if any | | -NA- |
| 3. Address (a) from which goods are consigned | | எக்ஸெல் இண்டஸ்ட்ரீஸ் (Godown) 303.மேலமாசி வீதி. மதுரை - 625 001 Regd Godown |
| (b) to which goods are consigned | | VIGNESH PRINTS 1/21, ராமநாதபுரம் ரோடு. விரகனூர் மதுரை - 625 009 (அச்சகம்) |
| 4. Discription of goods consigned (a) Name of the goods | | PP Non Woven Cloth |
| (b) Quantity of weight | | 1000 Mtrs |
| ( c) Vulue of the goods | | Approx Rs. 5000/- |
| 5. Purpose of transport (pleae tick ☑ ) (a) for sale / purchase ☒ (b) for shipment ☒ © transfer to branch / head office / consignment agent☒ (d) for execution of works contract☒ (e) for labour work / processing☑ | | |
| 6. To whom delivered for transport and vehicle no., if any / | | K.Moorthy, Tricycle Operator |
| 7. Remarks, if any | | Sent For Printing Purpose / Not for Sales |

I/ We certify that to the best of my / our knowledge the parculars are true, correct and complete.

Name and signature of the person to whome the goods were delivered for transporting with status of person signing

-NA- Customer's signature

Name and signature of the consigner / his employee / his representative

Date : 1-04-2022 Place : Madurai

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE



Cell: 90805 54802, 99424 90217

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# ஜி.எஸ்.டி., - தகவல்கள்

தகவல் உதவி:
என்.எஸ். பிரேம் குமார்,
சேர்மன், அரசு தொடர்புகுழு, ஸைஸ். சேம்பர்.

## GST - Jobwork 5% Applicable items

In the case of job work relating to printing, textile, jewellery and hides and skins, handicrafts, processing of foods etc., the rate is 5%

- ★ Printing of News Papers
- ★ Textiles and textile products failing under Chapters 50 to 63 in the First Schedule to the Customs Tariff Act, 1975.
- ★ All Products other than diamonds, falling under chapter 71 of Customs Tariff Act, 1975(Pearls, precious and semi-precies stones precious metals (like gold, silver, platinum) and their Article, imitation jewellery.
- ★ Printing of books (including Braille books), journals and periodicals
- ★ Printing of all goods falling under chapter 48 or 49 which attract GST rate of 5%.
- ★ All food and food products falling under chapters 1 to 22 of Customs Tariff Act.
- ★ All products falling under Chapter 23 of Customs Tariff Act (residues and waste from food industries, prepared animal fodder) except dog and cat food put up for retail sale falling under heading 2309 10 00.
- ★ Manufacture of handicraft goods.

## E-invoicing may applicable Annual turnover above Rs. 1.5 crore from Next Year

Important news for GST Traders, the Government has notified that E-inovicing likely to be mandatory for GST Businessmen with annual turnover above Rs. 1.5 Crore from next year.

The implementation of E-invoicing may be considered at the next GST Council meeting on 11th July. according to sources. The Government has declared that E-invoicing would be implemented beginning August 1 for businesses with turnover of more then Rs. 5 Crore.

The government plans to implement E-Invoicing from 1st January next year. For annual turnover of more than Rs. 5 Crore, e-invoicing will be applicable from August 1 this year. Currently, 6 portals (IRP) are functional for invoice Registration.

In the upcoming GST Council meeting, 4 additional IRP portals can be approved. On average, 60 lakh e-invoices are issued everyday from the current IRPs. Pre-filled GST returns will be easier to execute with 100% e-invoicing.

## பெரும் தொகை இழப்பைத் தவிர்க்க கவனத்தில் கொள்ள வேண்டிய சிறு விஷயங்கள்

சென்ற மாதம் நாளிதழ் ஒன்றில் காணப்பட்ட தகவல் யாதெனில், வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக பின்னலாடைகளை கொண்டு செல்லும் சரக்கு வாகனங்களை, வணிக வரித்துறையினர் ஆங்காங்கே வழியில் நிறுத்தி பரிசோதிக்கின்றனர். போதிய ஆவணங்கள் இல்லாதது, ஆவணங்களில் தவறுகள் காரணமாக, அபராதங்கள் விதிக்கின்றனர். கவனக்குறைவால் ஏற்படும் சிறு தவறுகளுக்குக் கூட, பெருந்தொகையை அபராதமாக செலுத்த நேரிடுகிறது, என்று.

**என்னென்ன தவறுகள் நிகழ்கின்றன? கவனத்தில் கொள்ள வேண்டியவை என்னவெனில்...**

- ★ இ-இன்வாய்ஸ் மற்றும் இ-வே பில் முரண்பாடு
- ★ இ-இன்வாய்ஸ் ஒரு தேதியும் இ-வே பில்-ல் வேறொரு தேதி குறிப்பிடுதல்
- ★ இ-இன்வாய்ஸில் அன்னிய நாட்டு பண மதிப்பும், இ-வே பில்-ல் இந்திய மதிப்பையும் குறிப்பிடுதல்
- ★ இ-வே பில் மட்டும் இணைத்துவிட்டு, இ-இன்வாய்ஸ் இணைக்காமல் விட்டுவிடுதல்
- ★ இ-இன்வாய்ஸ், இ-வே பில் இல்லமலேயே, கஸ்டம்ஸ் இன்வாய்ஸ் மட்டும் அனுப்புதல்.

## ஜி.எஸ்.டி., - கேள்வி - பதில்

**கேள்வி:** இ-இன்வாய்ஸ் & இ-வே பில் ஒரே தேதியில் இருக்க வேண்டியது அவசியமா ?

**பதில்:** இ-இன்வாய்ஸ் நேற்றைய தேதி என்றால் இன்று இ-வே ஜெனரேட் செய்யும்போது டாக்குமன்ட் நம்பர் சரியாக போட்டு இன்வாய்ஸ் தேதி இன்றைய தேதி (இ-வே ஜெனரேட் செய்த தேதி) போட்டிருக்கலாம். இ-இன்வாய்ஸ் ஜெனரேட் செய்தபின் வண்டி வரவில்லை என்றால் அதை மறு நாள் தான் அனுப்ப முடியும்.

வேறு வேறு தேதி இருக்கலாம் தவறில்லை. ஆனால், அதிகாரிகள் தவறு என்று சொல்லி மிரட்டுகிறார்கள் என்று தான் பல இடங்களில் கேள்விப்படுகிறோம். ஆனால் எந்த வணிகரும் தைரியமாக மேலதிகாரி இடம் புகார் கொடுக்க முன் வருவதில்லை.

ஒரு சிலர் அடுத்த நாள் இ-வே பில் போடும்போது, டாக்குமென்ட் தேதி, இன்வாய்ஸ் தேதி போடாமல் இ-வே அனுப்பும் தேதியே போட்டு விடுகிறார்கள்.

Kindly Save our Whatsapp No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifications, Amendments, New Technology etc.,
93441 97952

Kindly send your Feedbacks of our laabh Samachar & SCC Activities To
93441 97952

ஜி.எஸ்.டி., வரியில் சந்தேகமா? வாட்ஸ்ஆப் செய்யவும் 93441 97952

# 50th GST COUNCIL MEET - RECOMMENDATIONS




- Uncooked /unfried snack pellets reduced from 18% to 5%
- Fish soluble paste reduced from 18% to 5%
- Imitation Zari Threads/Yarn reduced from 12% to 5%
- LD slag to be at par with blast furnace slag and fly ash and reduced from 18% to 5%
- There is an IGST exemption on Dinutuximab (Quarziba) medicine when imported for personal use, as well as medicines and Food for Special Medical Purposes (FSMP) used in the treatment of rare diseases, and FSMP when imported by Centres of Excellence for Rare Diseases or any person or institution on recommendation of any of the listed Centres of Excellence.
- It was clarified that the supply of raw cotton by agriculturists to cooperatives, including kala cotton, is taxable under reverse charge mechanism.
- Transporters will not be required to file declaration for paying GST under forward charge every year
- No RCM on services supplied by a director of a company to the company in his private or personal capacity such as supplying services by way of renting of immovable property to the company
- Relief for taxpayer, Govt extended the special procedure regarding mismatch in ITC availed in GSTR-3B and 2A for two more years i.e 2019-20 and 2020-21
- Amnesty schemes notified vide notifications dated 31.03.2023 regarding non-filers of FORM GSTR-4, FORM GSTR-9 & FORM GSTR-10 returns, revocation of cancellation of registration *extended till 31.08.2023*
- To do away with the requirement that the physical verification of business premises is to be conducted in the presence of the applicant
- To provide for physical verification in high risk cases even where Aadhaar has been authenticated.
- System-based intimation to the taxpayers in respect of the excess availment of ITC in FORM GSTR-3B vis a vis that made available in FORM GSTR-2B
- Supply of food and beverages in cinema halls is taxable at 5%
- If the sale of cinema ticket and supply of food and beverages clubbed together then gst rate of cinema ticket will apply
- 28% GST on the value of the chips purchased in casinos
- 28% GST on the full value of the bets placed in Online Gaming
- GST Appellate tribunal will be started in a phased manner
- *Relaxations provided in FY 2021-22 in respect of various tables of FORM GSTR-9 and FORM GSTR-9C be continued for FY 2022-23*
- No GSTR-9 for turnover upto 2 crores
- Input Services Distributor (ISD) mechanism is not mandatory for distribution of input tax credit of common input services procured from third parties to the distinct persons as per the present provisions of GST law. Amendment may be made in GST law to make ISD mechanism mandatory prospectively
- Detailed Circular to be issued to provide clarity on liability to reverse input tax credit in cases involving warranty replacement of parts and repair services during warranty period
- Refund of accumulated input tax credit (ITC) to be restricted to ITC appearing in FORM GSTR-2B
- Only Name of state on tax invoice, not the name and full address of the recipient, in cases of supply of taxable services by or through an ECO
- Clarification regarding the manner of calculation of interest amount liable to be paid under section 50(3) of CGST Act, 2017 in respect of wrongly availed and utilized IGST credit, clarifying inter alia that in cases of wrong availment of IGST credit, the balance of input tax credit (ITC) in electronic credit ledger, under the heads of IGST, CGST and SGST taken together, has to be taken in consideration while calculating such interest liability as per rule 88B of CGST Rules, 2017.
- In accordance with the recommendations of Group of Ministers (GoM) on implementation of E-way bill requirement for movement of Gold/ Precious stones under chapter 71, the Council has recommended to insert rule 138F in CGST Rules, 2017, as well as in SGST Rules, 2017 of the States, who want to mandate the requirement of generation of e-way bills for intra-State movement of gold and precious stones under Chapter 71 within their States.

**Sowndarya Traders**

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# சேம்பர்-ன் செயல்பாடுகள் & நிகழ்வுகள்


2 செய்திகள் | தமிழ் மலர் | 27-6-2023 செவ்வாய்க்கிழமை

இன்று தொடங்குகிறது பன்னாட்டு வர்த்தக மாநாடு

## மலேசியா தொழில் வர்த்தக கருத்தரங்கில் நமது சேம்பர்

கடந்த மாதம் மலேசியாவில் நடைபெற்ற தொழில் வர்த்தக கருத்தரங்கு நிகழ்வில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மற்றும் அங்கத்தினர்கள் சிலர் கலந்து கொண்டனர். மலேசிய அரசின், தொழில் வர்த்தக கழகம் மற்றும் உலக தமிழ் சேம்பர் ஆப் காமர்ஸ் இணைந்து கடந்த ஜுன் மாதம் 27 முதல் 29ம் தேதி வரை மலேசியாவில் தொழில் வர்த்தக கருத்தரங்கை நடத்தியது. இதில் கலந்து கொள்ள நமது சேம்பருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததை ஏற்று, நிர்வாகிகள் மற்றும் அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாடு மூலம் வியாபாரப் பரிமாற்றங்கள், வியாபார தொழில் நுட்பங்கள், இந்தியா – மலேசியா இரு நாடுகளிடையே முதலீடுகளை உருவாக்க ஏற்பாடு செய்து கொள்ளலாம். இந்த செய்தி, அந்நாடு முன்னணி நாளிதழில் வெளியாகியுள்ளது. இதில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக கலந்து கொண்ட நிர்வாகிகளைக் காணலாம். இந்த கருத்தரங்கிற்கு பிறகு, நம் குறு, சிறு தொழில் முனைவோர்களின் வியாபார அபிவிருத்திக்காக, மலேசிய அரசின் தொழில் வர்த்தக கழகத்துக்கு சில கோரிக்கைகளை வழியுறுத்தி நமது சேம்பர் கடிதம் அனுப்பியுள்ளது. அதற்கான ஒப்புதலும், அந்நாட்டு தொழில் அமைச்சகத்திடம் இருந்து பதில் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கான அடுத்தகட்ட முயற்சில் நமது சேம்பர் கவனம் செலுத்தி வருகிறது.



## சிறப்பு சந்திப்பு

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் – தொழில் வர்த்தக மலரான லாப் ஸமாச்சார் இதழில் தொடர்ந்து விளம்பரம் தந்து ஆதரவளித்து வரும் **பாண்டியன் சர்பக்டண்ட்ஸ் பி.லிட்.,** நிறுவனத்தார் **திரு. கே.கே. தினகரன்** அவர்களை லாப் ஸமாச்சார் இதழ் குழுவினர் நேரில் சந்தித்து சென்ற மாத இதழை வெளியீடு செய்தனர்.

புகைப்படத்தில், (இடமிருந்து வலம்): திரு. டி.கே. யாகேஸ்வரன், திரு. கே.பி. சிவப்பிரகாஷ் பாபு, இதழ் சேர்மன் திரு. எஸ்.எம். கார்த்தி குமரன், திரு. கே.கே. தினகரன் மற்றும் திரு. டி.என்.சூரியப்பிரகாஷ். இணைச் செயலாளர் திரு. வி.வி. ராம்லக்ஷ்மண்ஜீ அவர்கள் இந்த சந்திப்பிற்கு உதவியாக இருந்தார்.



## சமூக சிறப்பு கூட்டத்தில் நமது சேம்பர்

பத்மஸ்ரீ டி.எம். சௌந்திரராஜன் அவர்களின் சிலை திறப்பு விழா ஏற்பாட்டிற்கு முன்னேற்பாடு கூட்டம், மதுரை, டி.எம்.எஸ். சங்க தலைவர் திரு. எம்.பி. பாலன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டர். இந்த கூட்டத்தில், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன், கே.எல்.என். பாலிடெக்னிக் கல்லூரி கவுன்சில் செயலாளர் திரு. கே.பி. ராதாகிருஷ்ணன், ஆஸ்திரேலியா திரு. அனகன் பாபு, அரசியல் ஆலோசகர் திரு. வித்யா பூர்ணாச்சாரி ஆகியோர் கலந்து கொண்டனர். ஜுலை 1 அன்று நடைபெற்ற சிலை திறப்பிற்கான பூமி பூஜை நிகழ்ச்சியில், நமது சேம்பர் சார்பாக மக்கள் தொடர்பு சேர்மன் திரு. டி.என். சூரியபிரகாஷ் அவர்கள் பங்கேற்றார்.

For Subscriptions
Advertisement
Donations etc.,
Make your payment to
**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
**A/c No: 30134805614**
IFSC No: SBIN 0011544

சேம்பர்-ன் 8வது செயற்குழு கூட்டம் கடந்த 20.06.2023 அன்று சேம்பர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சென்ற ஜுன் மாத ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் அலுவலக நிர்வாக செயல்பாடுகள்

– ஜே.எஸ். சாயிஜீவன், சேர்மன், அலுவலக நிர்வாகக் குழு

| | |
|---|---|
| நிர்வாக / செயற்குழு கூட்டங்கள் | 02 |
| தொழில் கூட்டங்கள் | 01 |
| சிறப்பு நிகழ்ச்சிகள் / கூட்டங்கள் & சந்திப்புகள் | 03 |
| புதிய உறுப்பினர்கள் சேர்க்கை – ஆயுட்கால | 00 |
| புதிய உறுப்பினர்கள் சேர்க்கை – சந்தா | 00 |
| நூலக பயன்பாடு | 0 |
| தொழில் ஆலோசனை / சேவை | 02 |
| உத்யம் பதிவு / திருத்தம் செய்தவர்கள் | 01 |
| முக்கிய கடிதப் போக்குவரத்து | 0 |
| அரசு கோரிக்கை | 01 |
| பொது நிகழ்ச்சிகள் / விழாக்களில் சேம்பர் பங்களிப்பு | 01 |
| வேலை வாய்ப்புகள் சேவைகள் | 0 |
| சமூக சேவைகள் | 0 |

# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன்

# வீட்டு உபயோக பொருட்களின்

# வர்த்தக கண்காட்சி மற்றும்

# விற்பனை

# SCC Trade Fair 2023

அனுமதி இலவசம்

**Date :**

## Aug. 4,5 & 6 - 2023

**Friday, Saturday & Sunday**

**Place :**

**V.S. Chellam Saraswathy Maaligai A/c Madurai.**

*Organised by* SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

*Co-presented by* SOWBHAGYAAS

**SCC Trade Fair 2023 - TEAM**

**K.K. DINESH,** *Chairman,*

**S.G.SRINIVASAN,** *Stall Committee Chariman*

*Committee Members :*

**N.N.HARIRAM,**
**M.K.YOGANATHAN,**
**M.G.VIJAYAKUMAR**

**For Stall Booking**
**91500 99456**
**94439 30728**

**Public Relation :** T.N.SURYA PRAKASH
**Stall Promotion :** S.M.KARTHI KUMARAN
**Event Publicity :** S.S.RAMSUNDAR
**Food :** Dr. A.R.GANESAN

**T.R.MOHANRAM** President
**KUMARAN B JAGHUVA** Imm. Pt. President
**K.K. KUBENDRAN** General Secretary
**A.B. KUMARESH BABU** Treasurer
**V.V. RAMLAKSHMANJI** Jt. Secretary
**T.R. SARAVANAN** Jt. Secretary





# உலக கைத்தறி தின வாழ்த்துகள்

# கைத்தறித்துறை வளர்ச்சிக்கு அரசின் முயற்சிகளும் சலுகைகளும்

1907 ஆகஸ்ட் 7 அன்று நம் நாட்டில் சுதந்திர போராட்டத்தின் ஒரு பகுதியாக அந்நிய துணிகள் புறக்கணிப்பு இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த நாளே இன்று வரை நம் நாட்டில் சர்வதேச கைத்தறி தினம் என்று அனுசரிக்கப்படுகிறது.

நம் நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவை கைத்தறி ஆடைகளே. கோடை காலத்தில் இதமும், குளிர்காலத்தில் கதகதப்பும் தரக்கூடிய கைத்தறி ஆடைகள் நீண்ட காலம் உழைக்கக் கூடியவை. கைத்தறி ஆடைகள் அணிவதால் உடலுக்கு காற்றோட்டம் ஏற்படுகிறது. இதனால் தோலில் அரிப்பு, ஒவ்வாமை ஆகியவை ஏற்படுவதில்லை.

அதிகரித்து விட்ட விசைத்தறிகளின் தாக்கம், கைத்தறி துணிகளுக்கு உரிய விலை கிடைக்காமை, நூல் விலை ஏற்றம், விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும் கைத்தறி துணிகள், இடைத்தரகர்களின் தலையீடு என கைத்தறி நெசவாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஏராளம்.

உலகில் பருத்தி விளையும் பரப்பளவில் முப்பத்தொன்பது சதவீத பரப்பளவு நம் நாட்டில் இருந்தாலும், மிகக் குறைவாகவே பருத்தி விளைகிறது. இதன் விளைவாக ஏற்படும் நூலின் விலை ஏற்றம் கைத்தறி நெசவாளர்களை பாதிக்கிறது.

நலிவடைந்து வரும் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

**மாநில அரசின் சமீபத்திய முயற்சி:**

கைத்தறி தொழிலில், வாய்ப்பும், குறைவான வருவாய் காரணமாகவும் இன்றைய படித்த இளைஞர்கள் இதில் நாட்டம் காட்டுவதில்லை. இதனை கருத்தில்கொண்டு தமிழக ஜவுளி மற்றும் கைத்தறித் துறை மாநில அமைச்சர் ஆர். காந்தி அவர்கள் கடந்த ஏப்ரல் 2023 அன்று நடைபெற்ற சட்டசபையில், கைத்தறித் துறையை மேம்படுத்த, பொருட்களின் பல்வகைப்படுத்தல் மற்றும் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி கைத்தறியில் மாற்றத்தை உருவாக்க, தனியார் பெரு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் அதிக வருவாய் ஈட்டவும், இளைஞர்கள் நெசவுத் தொழிலை ஒரு தொழிலாகக்கொள்ளவும் முடியும் என்றார். இளைஞர்களை இதில் ஊக்குவிக்க தொழில் பயற்சி அளிப்பதற்கு ரூ. 1.40 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த இளைஞர்கள் அருகில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் சேர்த்து, மத்திய அரசின் முத்ரா திட்டத்தின் கீழ் கடனுதவி பெறவும், தொழில்முனைவோராக ஆவதற்கு பரிந்துரைக்கப்படுவர் எனவும் தெரிவித்தார்.

**வழங்கப்பட்டு வரும் சலுகைகள்**

மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா என்பது கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் மூலம் நெசவாளர் ஒருவர் அறுபது வயதை அடையும் முன்னர் மரணமடைந்து விட்டால், அவரது வாரிசுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

**ஸ்வரோஜ்கார்** கடன் அட்டைத் திட்டத்தில் கைவினைக்கலைஞர்கள், மீனவர்களுக்கு கடன் வழங்கப்படுவது போல நெசவாளர்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் வழங்கல், முதிய நெசவாளர் ஓய்வூதியத் திட்டம், கைத்தறி நெசவாளர்களுக்கு மானியம் அளித்து சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை இல்லங்கள் கட்டித் தரும் திட்டம் என கைத்தறி நெசவாளர்களுக்கு பயன் அளிக்கும் பல்வேறு திட்டங்கள் நடைமுறை படுத்தப்பட்டுள்ளன.

கைத்தறி நெசவாளர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இருநூறு அலகு இலவச மின்சாரத்தை முன்னூறு அலகாக தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

உணவு, உடை, இருப்பிடம் என மனித அடிப்படைத் தேவைகளின் ஒன்றான உடைக்கான துணியை நெய்துத் தரும் கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்க, கைத்தறி ஆடைகளையே அணிய நாம் அனைவரும் முன் வரவேண்டும்.

கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் மத்திய அரசால் 1985-ம் ஆண்டு கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம் இயற்றப்பட்டு 1998 முதல் 11 ரகங்கள் கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது.


அதன்படி, கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட குறிப்பிட்ட தொழில்நுட்ப குறிப்பீடுகளுடைய ரகங்களான கரை பாவு பேட்டு டிசைனுடன் கூடிய காட்டன் வேட்டி ரகம், பாவு பேட்டு, ஊடை பேட்டு மற்றும் புட்டா டிசைனுடன் கூடிய காட்டன் மற்றும் பட்டு சேலை ரகம், கரை மற்றும் முந்தியுடன் கூடிய காட்டன் துண்டு ரகம், கரை பாவு பேட்டு டிசைன் மற்றும் முந்தியுடன் கூடிய கிரே அங்கவஸ்திரம், லுங்கி, பெட்சீட், ஜமக்காளம், சட்டை துணிகள், கம்பளி, சால்வை, உல்லன் ட்வீட் மற்றும் சத்தார்க் உள்ளிட்ட 11 வகை ரகங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ரகங்களை விசைத்தறிகளில் உற்பத்தி செய்வது கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தின்படி சட்டத்தை மீறிய செயலாகும். இது கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட 11 வகை ரகங்கள் குறித்து விளக்கம் பெற சென்னை குறலகம் 2-ம் தளத்தில் உள்ள கைத்தறி ஆணையர் அலுவலகத்தில் இயங்கி வரும் துணை இயக்குனர் அமலாக்கப் பிரிவு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

டெக்ஸ்டைல் துறையில் அனுபவம் உள்ள திரு. ஜி.ஆர். சுப்பிரமணியன் அவர்கள் நமது லாப் ஸமாச்சார் இதழுக்கு தெரிவித்தது.

மத்திய மாநில அரசுகள் மீனவர்களுக்கு மழைக் காலங்களில் தரும் நிவாரணம் போல், கைத்தறி நெசவுத் தொழிலாளிகளுக்கு மழைக்காலங்களில் நிவாரணம் தர வேண்டுகிறோம்.

இன்றைய நவீன உலகில், கைத்திற நெசவு தொழில் செய்ய தொழில்நுட்ப அறிவை நம்முடைய சமூக இளம் தலைமுறையினருக்கு பயிற்சி கொடுக்க மத்திய மாநில அரசுகள் ஒரு அமைப்பை உருவாக்கி கொடுத்து உதவ வேண்டும். இதனால், இளம் தொழில் முனைவோர் அதிக அளவில் பயிற்சி பெற்று தங்களுடைய வாழ்வாதாரம் உயர்த்திக் கொண்டு நம்முடைய சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறப்பான வளர்ச்சிக்கும் உதவும்.



கைத்தறி ஜவுளி ரகத்தின் சிறப்பையும், அதை பயன்படுத்தும் முறையையும் மக்களுக்கு தெரியப்படுத்த வலைத்தள அமைப்பை உருவாக்க வேண்டும்.

# இக்கட்டான சூழலில் இதயங்களில் நின்ற இருவர்



## கைத்தறி நெசவாளர்களுக்கு ஆதரவாக

தொழில் வர்க்கத்தின் உயர்வுக்காக சட்டமன்றத்தில் குரல் கொடுத்த துளசிராம், குடிசைத்தொழில் சீரமைப்புக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இக்குழுவின் உறுப்பினர் என்ற முறையில், குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருந்த ஏழைத் தொழிலாளர்கள் வாழ்வில் ஏற்றம் காண பல வகைகளிலும் துளசிராம் உதவினார்.

அவர்களுக்கு மூலதனம் மற்றும் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருட்கள் வழங்கவும், சலுகைகள் வழங்கவும் அவர் ஏற்பாடு செய்தார். குறிப்பாக நெசவாளர்களுக்கென மத்திய டிப்போ ஒன்றை ஏற்படுத்தினார். உற்பத்திப் பொருள்களை அங்கு சேகரித்து வைத்து விற்பனை செய்யும் ஏற்பாட்டை அரசாங்கம் மேற்கொள்ளுமாறு செய்தார்.

கைநெசவுத் தொழிலாளர்களுக்காகப் புதிய முறையில் பாவு தயாரிப்பது, பாடம் செய்வது, நெய்வது போன்ற தொழில் உத்திகளைக் கையாண்டார். பட்டு பருத்தி நூல் கலவை கொண்ட புடவைகளைத் தயாரிக்கக் கற்றுக் கொடுத்தார். ஜரிகைத் தலைப்பாகைத் துணிகளையும் உருமால்கள், லுங்கி, கைலி ஆகியவற்றையும் திறம்பட நெய்வதற்கு நெசவாளர்களுக்கு ஊக்கமளித்தார்.


தொழில் துறையினரின் பல்வேறு கோரிக்கைகளை உடனுக்குடன் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, அரசாங்கத்திடமிருந்து சலுகைகளை வாங்கிக் கொடுத்தார்.

சௌராஷ்ட்ரர்களில் பெரும்பாலோர் ஏழை நெசவாளர்கள். பரம்பரை பரம்பரையாக தெரு ஓரங்களில் பாவு நீட்டும் உரிமையை அவர்கள் பெற்றிருந்தார்கள். இவ்வாறு பாவு நீட்டும் பொழுது போலீசார் இடையூறு செய்ததோடு, நெசவாளர்களுக்கு அபராதமும் விதித்து வந்தனர்.

1861-ம் ஆண்டு முதல் இந்நிலை நீடித்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 1902-ம் ஆண்டு அப்போதைய மாவட்ட மாஜிஸ்டிரேட் ஏ.ஜி. கார்டியூவின் கவனத்திற்கு இப்பிரச்சினையைத் துளசிராம் கொண்டு சென்றார். இதுபற்றி நெசவாளர்கள் தரப்பிலும் போலீஸ் தரப்பிலும் வாதங்கள் நடைபெற்றன.

துளசிராமின் திறமையான வாதத்தால் நெசவாளர்களுக்கு வெற்றி கிடைத்தது. தெரு ஓரங்களில் பாவு நீட்டுவதற்கு மாஜிஸ்டிரேட் ஏ.ஜி. கார்டியூ அனுமதியளித்து உத்தரவிட்டார்.

துளசிராம் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின் விளைவாக நெசவாளர்கள் தெரு ஓரங்களில் பாவுநீட்டி, தங்கள் பணிகளைச் செய்கிறார்கள். இதனால் நெசவுத் தொழிலாளர் இதயங்களில் துளசிராம் நீங்காத இடம் பெற்று ஏழைப்பங்காளன் ஆனார்.



கைத்தறித் தொழில், மற்ற தொழில்களைப் போல் அல்ல. ஒரு சேலை நெய்யும்போது அதன் இரு ஓரங்களிலும், நெய்யப்படும் சித்திரங்களைப் பொருத்தும், உடல் பகுதியில் அமையும் வடிவம் பொருத்தும், புடவைத் தலைப்பில் அலங்கரிக்கப்படும் வடிவம் பொருத்தும், ஜரிகையின் தரத்தைப் பொருத்தும் கூலிகள் மாறும்.

இப்படிப்பட்ட சிக்கல்களைக் கொண்ட கைத்தறித் தொழிலில் 1961ம் ஆண்டில் கூலி போதவில்லை என்ற பிரச்சினை எழுந்தது. தொழிற்சங்கத்தினர் முதலாளிகளிடம் கூலி உயர்வு கேட்டுப் பேச்சு வார்த்தை நடத்திப் பார்த்தனர். சுமுகமான முடிவு ஏற்படவில்லை. வேலை நிறுத்தம் தொடங்கியது.

இத்தொழிலில் வேலைப்பிரிவினைச் சிக்கல் காரணமாக எந்த வேலைக்கு எவ்வளவு கூலி உயர்த்துவது என்று முடிவுக்கு வர முடியாமல் திணறினர். தொழிற்சங்க நிர்வாகிகள் கைத்தறித் தொழிலின் நுணுக்கங்களை அறியாதவர்களாக இருந்தனர். எஸ்.ஆர். ராதா அவர்கள் இதன் நுணுக்கங்களைப் புரிந்து கொண்டு பேசுபவராக இருந்தார்.

வேலை நிறுத்தப் போராட்டம் தீவிரமாக இருப்பதை அண்ணா உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் தந்தி கொடுத்து முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று நெசவாளர்கள் சார்பில் முதலாளிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கூலி உயர்வை ஒப்புக்கொள்ளாவிட்டால், நெசவாளர்களுக்கு ஆதரவாக தி.மு.க. நேரடியாக போராட்டம் நடத்தும் என்ற அண்ணாவின் அதிரடி அறிவிப்பிற்குப் பிறகு தஞ்சாவூர் மாவட்டக் காங்கிரஸ் கட்சி தலைவராக இருந்த கருப்பையா மூப்பனார் அவர்கள், எஸ்.ஆர். ராதா அவர்களை அழைத்தார்.

எஸ்.ஆர். ராதா 12% கூலி உயர்வு முதலாளிகளிடம் கேட்கும்படியும், 11%க்கு ஒப்புக் கொள்ளலாம் என்று முதலாளிகள் தரப்பில் கூறினர்.

ஒவ்வொரு சேலையிலும் ஒவ்வொரு விதமாக நெய்வதற்கு வெவ்வேறு கூலி இருக்கும் போது, புதுக் கூலியை எப்படிக் கணக்கிடுவது என்று கேட்டார். எஸ்.ஆர். ராதாவோ இப்பொழுது என்ன கூலி கொடுக்கிறார்களோ அதிலிருந்து 11% அதிகம் கொடுக்க வேண்டும் என்று விளக்கினார்.

முதலாளிகளுக்கும் தொழிற்சங்கத்திற்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. நெசவாளர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். எஸ்.ஆர். இராதா மிக உயர்வாக மதிக்கப்பட்டார்.

# வாழ்த்துகள்




கடந்த 14.06.2023 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கிகளின் இணைய கூட்டத்தில், இணையத்தின் தலைவர் Er. திரு. T.S. சாரதி அவர்கள் ஸௌராஷ்ட்ரா கூட்டுவு வங்கிக்கு ரூபாய் மூன்று கோடி டெபாசிட் தொகையாக அளிக்கும் படி வேண்டுகோள்விடுத்து, அதனை இணையத்தின் MD & AR அவர்களும், மற்ற இயக்குனர்களும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் முதல் தவணையாக ரூபாய் ஒரு கோடி தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கிகளின் இணையம் மூலம் கிடைத்துள்ளது. அதற்கான நெஃப்ட் பரிமாற்ற படிவமும், காசோலையையும் வங்கியின் தலைவரும், தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கிகளின் தலைவராகவும் உள்ள Er. திரு. T.S. சாரதி அவர்கள், வங்கியின் பொது மேலாளர் திரு. S.K. கண்ணன் அவர்களிடம் அளிப்பதை படத்தில் காணலாம். இது குறித்து நமது லாப் ஸமாச்சார் குழு திரு.T.S. சாரதி அவர்களை தொடர்புகொண்டதில், இந்த தொகையின் மூலம், பலருக்கு தொழில் கடன், வாகன கடன் போன்றவைகளையும், பங்குதாரர்களுக்கு டிவிடண்ட் தொகையும் அளிக்க இயலும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். தகவலுக்கு உதவிய வங்கியின் துணைத்தலைவர் திரு. S.K.B. சந்திரபிரகாஷ் அவர்களை சேம்பர் நன்றி தெரிவிக்கிறது.

**VIJAYASHANKAR SCREEN SUPPLIERS**

**Non Woven Fabrics & Bags**

Surgical Spunbond & Lace
SMMS
100% Viscos
Hydrophilic
JUTE FABRICS & BAGS
COTTON FABRICS & BAGS
Sanitary Napkin Raw Materials
Screen Printing Materials /
Plastisol Ink (Sports Printing) Water Base Ink, Sublimation Ink & Paper

**Surgical Gown, Mask & More**

N95 Masks
PPE Kit Surgical

J.A. SANKAR
94431 34465

For Order & Info
93441 04451, 91500 32885 / 86

H.O.: 44/1, New No.105, South Masi Street, Madurai - 1. Email: vijayasankar@gmail.com
B.O.: 94, 102 & 103A, South Marret Street, Madurai - 625001

**TATA HEALTH INSURANCE**

TATA AIG INSURANCE
WITH YOU ALWAYS

தனி நபர் மற்றும் குடும்பத்திற்கு மருத்துவக் காப்பீடு
0% EMI முறையில் மருத்துவப்பாலிசி எடுத்துக்கொள்ளலாம்

15% இந்த விளம்பரத்தை பார்த்து பாலிசி எடுக்கும் நபருக்கு தள்ளுபடி வழங்கப்படும்

S J RAJ KUMAR
Branch Manager
Call: 93608 71715

- ✓நுழைவு வயது வரம்பு கிடையாது.
- ✓காப்பீடு தொகை ரூ. 3 லட்சம் முதல் ரூ. 50 லட்சம் வரை.
- ✓அறை வாடகையிலிருந்து 100% க்ளைம் பெறும் வசதி உள்ளது.
- ✓புறநோய் / பல் மருத்துவம் / எடை குறைப்பு சிகிச்சைக்கு க்ளைம் பெரும் வசதி உண்டு.
- ✓வெளிநாடுகளுக்கு சென்று சிகிச்சை பெறும் வசதி. (Global Cover)
- ✓பாரம்பரிய ஆயுஷ் மருத்துவத்திற்கும் முழு காப்பிடு வழங்கப்படும்.
- ✓அட்மிஷனுக்கு முன்னரும், டிஸ்சார்ஜ்க்குப் பின்னரும் ஆகும் செலவுகளைப் பெறலாம்.
- ✓கட்டும் பிரிமியம் தொகைக்கு வருமான வரி விலக்கு உண்டு.(80D)
- ✓மருத்துவனையில் பணம் செலுத்தாமல் சிகிச்சை பெறும் வசதி
- ✓நார்மல் & சிசேரியன் பிரசவத்திற்கான செலவுகளை பெறலாம்.
- ✓சிகிச்சையினால் ஏற்படும் வருமான இழப்பிற்கு காப்பீடு.

**JC கணேசன் மருத்துவமனை**
NABH Accredited
அழகர்கோயில் ரோடு, சர்வேயர் காலனி, மதுரை – 7
98421 03579, 98427 03579, 97886 03579
jcganesan@gmail.com , Facebook.com/jcortho

**Dr. J.C. GANESAN**
MBBS., D.Ortho., DNB Ortho, MNAMS, Mch ortho(UK)

**Dr. MALARKODI GANESAN**
MBBS., DGO, DNB(org)

**சிறப்பு சிகிச்சை முறைகள்**

- மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
- ஆர்த்திராஸ்கோப்பி சிகிச்சை
- சேராத எலும்பை சேர்க்கும் / வளர்க்கும் வளையமுறை இல்லிசாரோவ் சிகிச்சை
- முதுகு, மூட்டு, தோள்பட்டை வலி சிகிச்சை
- குழந்தையின்மை சிகிச்சை
- வலியில்லாப் பிரசவம்
- கர்ப்பப்பை கோளாறுகள்
- லேப்ராஸ்கோப்பி சிகிச்சை

இன்சூரன்ஸ் வசதி: மெடி அசிஸ்ட், ஸ்டார் ஹெல்த், பென்சனர் கவர்ன்மென்ட் எம்பிளாயிஸ், குட் ஹெல்த் வசதிகள்

# வேலை வாய்ப்புகள் பகுதி

வேலை தேவை &
வேலைக்கு அட்கள் தேவைக்கு **93441 97952**

### வேலைக்கு அட்கள் தேவைக்கு

**முன்னணி உணவுத்துறை நிறுவனத்திற்கு ஆட்கள் தேவை**

| | |
|---|---|
| பணி | : அலுவலக உதவியாளர் & டெலிவரி |
| வயது | : 25 – 35 |
| கல்வி | : 10+2 , டிகிரி |
| அனுபவம் | : – |
| தேர்வு | : 2 நபர் / ஆண் |

**முன்னணி சுற்றுலா நிறுவனத்திற்கு ஆட்கள் தேவை**

| | |
|---|---|
| பணி | : அலுவலக உதவியாளர் |
| வயது | : 25 – 35 |
| கல்வி | : 10+2 , டிகிரி |
| அனுபவம் | : 3 ஆண்டு அலுவல் பணி, கணினி / ஆங்கிலம் பேசுதல் |
| தேர்வு | : 3 நபர் / பெண் (ஸௌராஷ்ட்ரா) |

### வேலை தேவை

| | |
|---|---|
| பெயர் | : N.A. விஷ்ணு |
| கல்வி | : B.Sc., (Maths) |
| முன் அனுபவம் | : Service Delivery Executive |
| எதிர்பார்ப்பு | : IT Field |
| வயது | : 23 |
| திருமணம் | : இல்லை |
| தாய்மொழி | : ஸௌராஷ்ட்ரா |
| முகவரி | : கைத்தறி நகர், நிலையூர் |

| | |
|---|---|
| பெயர் | : B.K. கிரிதரன் |
| கல்வி | : B.Sc., (Physics) |
| முன் அனுபவம் | : Service Delivery Executive |
| எதிர்பார்ப்பு | : IT Field |
| வயது | : 23 |
| திருமணம் | : இல்லை |
| தாய்மொழி | : ஸௌராஷ்ட்ரா |
| முகவரி | : கைத்தறி நகர், நிலையூர் |

# வெற்றி



14.07.2023 - **சந்திராயன் - 3**
வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் **இஸ்ரோ** (ISRO) **விஞ்ஞானிகளை வாழ்த்துகிறது.**

வேலை வாய்ப்பு மற்றும் வேலைக்கு ஆட்கள் கோரி நமது சேம்பர் அலுவலகத்தை தொடர்பு கொண்டவர்களின் விபரம் மட்டுமே இங்கு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.


# அப்போலோ மோட்டார் & பம்ப்ஸ்

APPOLO SALES & SERVICE

Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE
YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT

32B, குருவிக்காரன் சாலை,
கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.
**98428 14725**

பழைய மோட்டார் EXCHANGE செய்யப்படும்



கம்பரசர் மோட்டார் ரூ 12,500 முதல்



மோனோபிளாக் மோட்டார் ரூ 6500 முதல்



ஓபன்வெல் மோட்டார் ரூ 5500 முதல்



சப்மெர்சிபள் பம்ப் (காப்பர் ரோட்டர்) ரூ 7500 முதல்


## மருத்துவத் தகவல்

**கேள்வி:** என் மனைவிக்கு உள்ள ஆஸ்துமா கோளாறுக்காக ஸ்டீராய்டு ஊசி போடப்படுகிறது. ஸ்டீராய்டு ஊசி போடுவதால் எலும்பினில் பாதிப்பு ஏற்படுமா?

**பதில்:** ஸ்டீராய்டு ஊசி மற்றும் வாய் வழியாக எடுத்தால் அது எலும்பை பாதிக்கும். நீண்ட நாட்கள் எடுப்பதால் Osteoporosis என்னும் நோய் உண்டாகும். மேலும் சிலருக்கு AVN என்னும் நோயும் உண்டாகும். எலும்பு முறிவும் சுலபமாக ஏற்படலாம். மேலும் Osteoporosis –ஐ தடுப்பதற்கு Bisphosphonates குழுமம் மருந்துகள் எடுக்க வேண்டும்.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,
வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக்,
செல்: 93442 46436


## Available for Lease Rent

| | |
|---|---|
| Address | : Shed No. 126, SIDCO Industrial Estate, Kappalur, Madurai - 625008. |
| Plot Size | : 28.23cents, |
| Building Area | : 65.6*41 : 2690Sq.ft. |
| EB Power | : 5KW |

**Owner Name :**
**M.K. Kaladhar Babu**
Managing Director,
M/s. Pandian Printpacks and Textile Mills Pvt. Ltd.,
Kappalur, Madurai - 625008.
GST No.: 33AABCP0789M1Z4

Lease Rent for immdiate occpancy
Contact : **99944 35350 / 99944 98090**

நூருண்டு கால பட்டு பாரம்பரியம்
**SRB SILKS HOUSE**
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

**SRB FINSERVE PVT.LTD.**
B1, Sivagangai Road, Managiri,K.K.Nagar,Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

**SRB RETAIL LLC.**
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

**SRB MULTI PURPOSE HALL**
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar,Madurai.
Cell : 89039 29247

**EXPRESS BRIYANI**
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

**KEESHTU BOLI & SNACKS**
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

**SRB CATERING**
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

**SWASI NATURO CURE HOSPITAL**
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

**S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL**
**S.R.B.ARUNLAL**

# TReDs - டிரெட்ஸ்-ல் இணைந்தால் கிடைக்கும் பயன்

மத்திய அரசு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நலனுக்காக பல்வேறு கடன் சலுகைகள், வியாபார மேம்பாட்டிற்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. அதில், ஜெம், ட்ரெட்ஸ் போன்றவையும் ஆகும்.

வட மாநில தொழில் முனைவோர்கள், இதில் உள்ள பயன் அறிந்து ஆர்வத்துடன் இணைந்து பலனடைந்து வருகின்றனர். ஆனால் இது குறித்த விழிப்புணர்வு தென்மாநில தொழில் முனைவோர்களிடத்தில் குறைவாகவே காணப்படுகிறது என்று துறை சார்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த இணையதள பாதையில் குடிசைத் தொழில் முதல் நடுத்தர நிறுவனங்கள் வரையிலான எம்.எஸ்.எம்.இ., நிறுவனங்கள் இணையலாம். மத்திய அரசின் உத்யம் சான்றிதழ் பெற்றிருந்தால் மட்டுமே இணையதளத்தில் இணைய முடியும்.

எம்.எஸ்.எம்.இ., நிறுவனங்களுக்கும், அரசு மற்றும் தனியார் பெரு நிறுவனங்களுக்கும் இடையே ஒரு பாலமாக "ட்ரெட்ஸ்" திட்டம் செயல்படுகிறது.

அரசு, தனியார் பெரு நிறுவனங்கள் பொருட்களை வாங்கிய பின் அதற்கான தொகையை தாமதமாக விடுவிக்கும் பட்சத்தில் ட்ரெட்ஸ் திட்டத்தின் கீழ், தொகையில் 90%-ஐ அரசிடம் இருந்து எம்.எஸ்.எம்.இ., நிறுவனங்கள் கடன் பெறலாம்.

உதாரணமாக ஒருவர் மின்வாரிய பராமரிப்பு பணியை ஒப்பந்தமாக (எம்.எஸ்.எம்.இ.,) மேற்கொண்டிருந்தால் அவருக்கு மின்வாரியம் தர வேண்டிய ரூ. 10 லட்சம் தொகை உடனடியாக கிடைக்காது. பணம் கைக்கு வர ஒரு மாதமாகலாம். பணம் உடனே கிடைத்தால் தான் அடுத்தடுத்த பணிகளை தொடங்க ஏதுவாக இருக்கும். பணம் முடங்கினால் தொழிலும் முடங்கிவிடும்.

இதைத் தவிர்க்கும் வகையில், ட்ரெட்ஸ் திட்டத்தின் கீழ், எம்.எஸ்.எம்.இ., நிறுவனங்கள் மின்வாரியம் தர வேண்டிய ரூ. 10 லட்சத்தில் 90% தொகையை கடனாகப் பெறலாம்.

அதன்பின் ட்ரெட்ஸ் திட்டத்தின் கீழ் மின்வாரியம் முழுத்தொகையை செலுத்த வேண்டும். மின் வாரியம் செலுத்திய பின், எம்.எஸ்.எம்.இ., நிறுவனங்களுக்கு வரவேண்டிய 10 சதவீத தொகை விடுவிக்கப்படும். இருதரப்பும் இந்த ட்ரெட்ஸ் தளத்தில் இணைந்தால் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் கடன் பெற முடியும்.

# மரமும் - மின்சாரமும்

## மழைக்காலங்களில் எச்சரிக்கை

மழைக்காலம் நெருங்குகிறது. முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டிய சில விஷயங்களில் இதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அது மரமும், மின்சாரமும்.

மரங்களையும் மனிதர்களையும் பிரிக்க முடியாது. இப்பூவுலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் மரத்தை நம்பியே வாழ்கின்றன. ஆனால், அவ்வப்போது, மரங்கள் திடீரென முறிந்து விழுந்து மனித உயிரிழப்புகளையும், பொருள் சேதங்களையும் ஏற்படுத்திகின்றன. சாலைகளில் அன்றாட போக்குவரத்து பாதிப்பையும் ஏற்படுத்துகின்றன.

பொதுவாக, காய்ந்த மரக்கட்டை என்பது மின்சாரம் கடத்தாப் பொருளாகும். ஆனால், ஈரமான மரத்தில் மின்சாரம் பாயும். எனவே, மழைக்காலத்தில் மரம் நனைந்து ஈரமாக இருக்கும்போது அதில் மின்சாரம் பாயும். இந்நேரங்களில், மழைக்கு ஒதுங்கி மரங்களை ஒட்டி நிற்கும் மனிதர்கள், மின்கம்பிகள் அந்த மரக்கிளைகளை உரசிச் செல்லும்போது ஏற்படும் மின்சார அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டு உயிரிழக்க நேரிடுகிறது.

மேலும், மரத்தின் கிளைகள் அடர்த்தியாகி மின் கம்பிகள் நெருக்கமாக வரும்போது காற்றும் பலமாக வீசினால், கிளைகள் அங்குமிங்கும் அசைந்து கம்பிகள் ஒன்றோடொன்று உரசி தீப்பொறிகள் ஏற்படும். மின்கம்பிகள் உரசிக்கொள்வதால் ஷார்ட் சர்க்யூட் ஏற்படும். அச்சமயத்தில், மரக்கிளைகள் மின்பாதிப்பினை தாங்க முடியாமல் முறிந்து விழும். அதனால் அவ்வழியாகச் செல்பவர்கள் மீது மரக்கிளை விழுந்து உயிரிழப்பை ஏற்படுத்தும். அதோடு, மின் விநியோக மின்மாற்றிகளில் பழுது ஏற்படவும் வாய்ப்புண்டு.

மேலும், மழையின் போது, இடி, இடித்து மின்னல் மின்னினால் அப்போது மரங்களின் அருகில் நாம் செல்லக்கூடாது. மின்னல் நொடிக்கு 50 முதல் 100 முறை பூமியைத் தாக்கும். அப்போது 30000 டிகிரி செல்சியஸ் வெப்பம் ஏற்படும். இதன்மூலம் மரம் பழுதாகி மரத்தின் கிளைகள் பாதியாகப் பிளவுப்பட்டு கீழே விழும் நிலை உருவாகும்.

மரங்களுக்கு அருகில் மழை நீர் வடிகாலுக்காகவோ, வேறு காரணங்களுக்காகவோ பள்ளம் தோண்டியிருந்தால், அம்மரங்கள் எந்நேரத்திலும் கீழே விழுந்து மனிதர்களுக்கு உயிரிழப்பினை ஏற்படுத்த வாய்ப்புண்டு. அதுபோன்ற மரங்களைக் கண்டறிந்து கண்காணிக்க வேண்டும்.

எனவே, மழைக்காலங்களில் மரங்களின் அருகே செல்வதைத் தவிர்ப்போம். பழமையான மரங்களையும், இயற்கையால் தாக்கப்பட்ட மரங்களையும், பாதுகாப்பற்ற நிலையில் உள்ள மரங்களையும் சீர்படுத்துவோம். மனித உயிரிழப்புகளைத் தடுப்போம்.



VEDHAVALLI HOLIDAYS

# OUR SERVICES



## Flight Ticket
Domestic and International



## Tour Package
Domestic and International



## MICE
Meeting | Incentive | Conference | Events



## Family Tour Package



## Corporate Tour Package



## Car Rental

www.vedhavalliholidays.com

**BOOK NOW** 97870 66066

VEDHAVALLI HOLIDAYS

Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking

**வேதவல்லி ஹாலிடேஸ்**

காமராஜர் சாலை, மதுரை ● வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி



# பான் – ஆதார் இணைக்காத நபர்களுக்கு என்ன சிக்கல்? அடுத்து என்ன செய்ய வேண்டும்?




பான் கார்ட்-ஐ PAN - (Permanent Account Number) ஆதாருடன் இணைக்க வேண்டும் என்ற அறிவுறுத்தலை நீண்டகாலமாக நாம் கேட்டு வருகிறோம். ஆனால் இன்னும் பலர் இதை இணைக்கத் தவறியுள்ளார்கள்.

ஒருவேளை நீங்கள் இதுவரை உங்களது பான் கார்ட்-ஐ ஆதாருடன் இணைக்கவில்லை என்றால், என்ன விளைவுகள் ஏற்படும்?.

மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) ஜூன் 30, 2023ம் தேதயை பான் – ஆதார் இணைப்பிற்கான கடைசி காலக்கெடுவாக அறிவித்திருந்தது. அதாவது ஜூன் 30ம் தேதிக்குள் உங்களுடைய பான் எண்-ஐ ஆதாருடன் இணைக்கலாம். தவறினால், ஜூலை 1ம் தேதி, 2023 முதல் உங்கள் பான் எண் செயலிழந்துவிடும். இதன் காரணமாக, பான் எண் தேவைப்படும் வங்கி உள்ளிட்ட அனைத்து பணிகளிலும் நீங்கள் சிக்கல்களைச் சந்திக்க நேரிடும். மேலும் உங்களது பணப் பரிவர்த்தனைகளிலும் சிக்கல் ஏற்படலாம்.

**பான் - ஆதார் இணைக்கவில்லை என்றால் என்ன சிக்கல்?**

- ★ பான் – ஆதார் இணைக்காத ஒருவர் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்ய முடியாது.
- ★ நிலுவையில் உள்ள வருமான வரி கணக்கைச் செயல்படுத்த முடியாது.
- ★ செயலிழந்துவிட்ட பான் எண்ணைக் கொண்டிருக்கும் நபரின், நிலுவையில் உள்ள வருமான வரியைத் திருப்பி செலுத்தும் முறை செயல்படுத்தப்படாது.
- ★ தவறான அல்லது பிழையுடன் இருக்கக்கூடிய வருமான வரி அறிக்கையை மாற்றுவது தொடர்பான, செயல்முறையை மேலும் தொடர முடியாது.
- ★ பான் எண் செயலிழந்துவிட்டால், அதிக விகிதத்தில் வரி கழக்கப்படும். வங்கி தொடர்பான பணப்பரிவர்த்தனைகளைச் செய்ய முடியாது. KYC-க்கு பான் எண் அவசியம்.

**பான் கார்டு செயலிழந்துவிட்டால் என்ன செய்வது?**

ஒருவரின் பான் செயலிழந்துவிட்டால், அவர் தனது பான் எண்ணை மீண்டும் செயல்பட வைக்க என்ன செய்ய வேண்டும் என்பதை மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) மார்ச் 28, 2023 தேதியிட்ட அறிவிப்பில் தெளிவுபடுத்தியுள்ளது.

அதன்படி, ரூ. 1000 அபராதம் செலுத்தி உங்களின் பான் எண்ணை மீண்டும் செயல்பட வைக்கலாம். எனினும், நீங்கள் எந்த தேதியில் பான் எண்ணை ஆதாருடன் இணைக்கிறீர்களோ அதில் இருந்து 30 நாட்களுக்கு பின்னரே உங்களின் பான் எண் மீண்டும் செயல்பட தொடங்கும். எடுத்துக்காட்டாக ஜூலை 5ம் தேதி நீங்கள் லிங்க் செய்தால், ஆகஸ்ட் 5ம் தேதி உங்கள் பான் மீண்டும் செயல்பட தொடங்கும்.

## Companies must learn to create talent, not just focus on rewarding it

The coming decade is crucial for businesses and the onus of laying the foundation of a healthy workforce falls upon chief human resource officers (CHROs).

Organisations must evolve to take responsibility for their people and help them learn new skills. It is no longer enough for organisations to identify, recognise and reward talent.

The rapidly changing technological environment has made it difficult for HR professionals to find fully trained people with all the requisite skills to navigate new technologies.

It is important that organisations work towards re-igning in the growing polarisation among those with the skills to take advantage of digitisation and those without.

CHROs must now bear the responsibility of increasing people's employability by providing them with the skills necessary to stay relevent in the changing world.

Clear visibility of the skills deficit will enable CHROs to plan short and long-term skill-development strategies.

There are several upskilling initiatives that run in tandem across the organisation without clear visibility of either the goal or the RoI.

*- The Hindu*




PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




## PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragnace Pvt. Ltd.



K.K.Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

Scanned with CamScanner

# அலுப்புக்கு ஒரு மருந்து...

- மரு. பி.ஆர்.ஜெ. கண்ணன்
(நூல்: இதயத்திலிருந்து...)



வெள்ளி அதிகாலை எழுந்து திருச்சிராப்பள்ளிக்குச் சென்று ஒரு மருத்துவக் கருத்தரங்கில் உரையாடிவிட்டு அங்கிருந்து டெல்லிக்குச் சென்று எய்ம்ஸ் மருத்துவமனையில் இரு நாட்களாக நீண்ட கருத்தரங்கில் பங்கெடுத்துவிட்டு இன்று மதுரைக்கு விமானத்தில் திரும்பியபோது தூங்கி வழிந்து கொண்டிருந்தேன். ஒன்றும் பெரியதாக உடம்பை அலட்டிக்கும் படியாக செய்யவில்லையே, ஏன் இவ்வளவு அலுப்பு என்று எண்ணிக் கொண்டிருந்தேன். மதுரை வந்தடைந்தேன். தெரிந்த நண்பரை விமான நிலையத்தில் பார்க்க நேர்ந்தது. அவர் தன்னுடைய காரில் அழைத்தார்.

“எனக்கு ஒண்ணும் அவசரம் இல்ல. அப்படியே ஒரு மூணு நாலு கிலோமீட்டர் நடந்து போய் பெருங்குடியைத் தாண்டி ஏதாவது வண்டி புடிச்சிக்கலாம்ணு பாக்குறேன்”. என்றேன்.

“என்ன? நடக்கப் போறீங்களா?” நான் சொல்வதை நம்புவதா இல்லையா என்று அவருக்குப் புரியவில்லை...

“என்ன சார், உங்க கூட ஒரு அரை மணி நேரம் பேசலாம்ணு பார்த்தேன்... வண்டிக்கே வந்துருங்க சார்....” என்றார்.

“ரொம்ப நன்றி சார். வேணும்னா நீங்களும் வாங்களேன், பேசிகிட்டே நடக்கலாம்”. “ஐயையோ... நாம அப்புறம் பேசலாம்” என்று போய் விட்டார்.

மகிழ்ச்சியாக நடக்க ஆரம்பித்தேன். வழியில் ஐந்து ஆட்டோக்கள் மற்றும் இரண்டு டாக்சிகள் எனதருகில் வந்து, ’சார்?’... என வினவினார்கள். நான் மறுத்து, தலை அசைத்து நடக்க ஆரம்பித்தேன்....

இதைப் பதிவிடுவதற்குக் காரணம் இருக்கிறது. உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்றால் தினமும் ஐந்து மணிக்கு எழுந்து நடக்க வேண்டும் என்றோ, ஜிம்மிற்குச் செல்ல வேண்டும் என்றோ இல்லை. அவ்வாறு செய்தால் நல்லது தான். அதை விட, நம் தினசரி வாழ்க்கையில் உடற்பயிற்சி ஓர் அங்கமாக இருக்க வேண்டும். முடிந்த வரை மிதிவண்டி உபயோகியுங்கள். மாடிக்குப் போக வேண்டும் என்றால், படிகளில் தான் ஏறுவேன், மின் தூக்கியில் செல்ல மாட்டேன் என்று உறுதி எடுங்கள். ஆட்டோவில் சென்றால், அரை கிலோமீட்டர் முன்பாக பிரதான சாலையிலே இறங்கி வீட்டிற்கு நடந்து செல்லுங்கள். பேருந்தில் சென்றால், ஒரு நிறுத்தம் முன்பாகவே இறங்குங்கள். அலுவலகத்தில் ஒரு கோப்பை (ஃைபல்-ஐ) மற்றொரு துறைக்கு அனுப்ப வேண்டுமா, உதவியாளரை அழைக்காமல் நீங்களே சென்று அந்த நண்பரின் மேஜையில் வைத்துவிட்டு வாருங்கள். பணி முடிந்து வீட்டிற்குத் திரும்பியபின், கடைக்கோ வேறு சிறு வேலைக்கோ வெளியே செல்ல வேண்டி வந்தால் நடை அல்லது மிதிவண்டியைத் தேர்ந்தெடுங்கள்.

இதெல்லாமல் யார் சார் செய்வா என்கறீர்ளா? நீங்கள் செய்யத் தொடங்குங்கள். பின்னர் அதுவே பழக்கமாகிவிடும். விமான நிலையத்தில் எல்லோரும் நகரும் படிக்கட்டில் (எஸ்கலேட்டர்) செல்ல, நான் மற்ற படிக்கட்டில் ஏறிச் செல்லும் பொழுது எனக்கு ஒரு தனி உற்சாகம் பிறக்கும். உடற்பயிற்சி செய்தால், நம் உடலில் என்டார்ஃபின், என்கெஃபாலின் போன்ற ஹார்மோன்கள் சுரக்கும். அவை உடலில் பல நன்மைகள் செய்யும். மூளையையும் இதயத்தையும் குதூகலமாக வைக்கும். உடற்பயிற்சி செய்துவிட்டு வருகிறவர்களை கவனியுங்கள். நான் சொல்வது உண்மை என்று உங்களுக்குப் புரியும்.

வீட்டிலிருக்கும் பொழுதோ, வேலை செய்யும் இடத்திலோ அலுப்பாக இருக்கிறதா? “ஒரு காபி குடிக்கலாமா” என்று நினைக்காதீர்கள். வெளியே செல்லுங்கள், ஒரு பத்து நிமிடம் வெயிலில் எங்காவது சுற்றுங்கள். திரும்பி வந்து ஒரு குவளை நீர் அருந்துங்கள். அப்புறம் பாருங்கள்!...

வீட்டை அடைந்தேன். ஒரு ஆனந்தக் குளியலைப் போட்டுவிட்டு சத்தமாகப் பாடிக்கொண்டே குளியலறையிலிருந்து வெளியே வந்தபொழுது என் மனைவி கேட்டார். “ஏங்க, வெளியூருக்குப் போயிட்டு வந்தா, எல்லோரும் டயர்டா இருக்குன்னு சொல்வாங்க, நீங்க என்னடான்னா இப்படி இருக்கீங்களே, எப்படி?”

“அது ரகசியம்”... என்று கண் சிமிட்டினேன்.



# இதுவே சிறந்த தானம்

கலியுகத்தில் சிறந்தது தானம் என்பார்கள். தியானம் செய்ய முடிகிறதோ இல்லையோ, தானம் செய்யலாம்.

தானம் என்றதும், இருப்பவர்காள் தான் செய்ய முடியும், நம்மாள் என்ன செய்ய முடியும் என்று எளியவர்கள் நினைப்பதும், இருப்பவர்கள், பொற்காசுகளை அள்ளிக் கொடுப்பது தான் தானம் என்றும் கருதுவது உண்டு.

மஹாபாரதத்தை எழுதிய வேத வியாசர்–ன் பிரம்ம சூத்திரம் எனும் நூல், அதற்கு உரை நூலை, சுவாமி ராமானுஜர் ஸ்ரீபாஷ்யம் என்ற பெயரில் எழுதியுள்ளார். அதற்கும் ஒரு விரிவான உரை நூல், ஸ்ருதப்பிரகாசிகை என்ற பெயரில் உள்ளது. அதில், தானம் என்றால் "லோபராஹித்யம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதி உதவியை எதிர்பாராமல், வாரிக்கொடுப்பது தானம் என்று பொதுவாக நினைத்திருப்போம். இது ஒரு வகை தானம் என்றாலும், இது எல்லோராலும் கடைப்பிடிக்க இயலாது.

இதில் குறிப்பிட்டுள்ள தானம் என்பது, ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கக்கூடியதாகும். அது "பேராசையை" விளக்குதல் என்பதாகும். ஆம்!... பேராசையை விளக்குவது கூட ஒரு தானம் ஆகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு என்ன தேவையோ, அதைத் தாண்டி ஆசைப்பட்டு சேமித்து வைத்துக்கொள்ளமல் இருப்பது.

இந்தக் காலத்தில், எத்தனை சேர்த்தாலும் போதாது, எத்தனை இருந்தாலும் போதாது என்று சொல்லிக்கொண்டு நம்முடைய தேவைக்கு அதிகமாக சேர்த்து வைத்துக்கொள்வது. இதற்கு பெயர் தான் லோபம், பேராசை என்பது. அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படுவது மட்டும் குற்றமல்ல... நம் தேவையைத் தாண்டி சேர்த்து வைத்துக்கொள்வது குற்றம் தான்.

ஒன்றை நம் தேவையோடு நிறுத்திக்கொண்டால், மற்றவை பிறரின் தேவைக்குப் தானாக கிடைத்துவிடும். இதுவே மிகப்பெரிய தானமாக கருதப்படும் என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

தானத்தைப்போல நவீன காலத்து சேவைக்கு, சமீபத்தில் நம் பாரதப்பிரதமர் அவர்கள் கூறியதைப் பார்போம்...

அதிக அறிவுத் திறன் கொண்வட பள்ளி மாணவர் என்று சமீபத்தில் கூறப்பட்ட செல்வி விஷாலினி. இவர் நெல்லை மாவட்டத்தில், நம் சமூக பள்ளியில் பயின்றுவந்த போது, பாரதப்பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் நேரடி காணொளி காட்சி மூலம் அந்த மாணவியுடன் வாழ்த்து தெரிவித்து உரையாடினார். அப்போது அந்த மாணவி, "தன்னைப்போன்ற சாதாரணமானவர்கள் எவ்வாறு நாட்டுக்கு சேவை செய்ய முடியும்" என்று கேட்டார். அதற்கு பிரதமர் அவர்கள், "சேவை செய்ய நினைப்பவர்கள், தனியாக இறங்கி செய்ய வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. நம் அன்றாட வாழ்வில், மின்சாரம், தண்ணீர் ஆகியவைகளை சிக்கனமாகவும், பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவதுமே நாட்டுக்கு செய்யும் சேவையாகும்" என்று தெரிவித்தார்.

ஆன்மிக தகவல்கள் :
ஆன்மிக சொற்பொழிவாளர்
ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் அவர்களின் உரையிலிருந்து

# தானம் VS தர்மம்

சமீபகாலமாக வாட்ஸ்ஆப்–ல் ஒரு செய்தி, தானம், தர்மம் பற்றி உலா வருவதை காண நேர்ந்தது. அதில், பிறர் கேட்டுக் கொடுத்தால், தானம் என்றும், கேட்காமல் கொடுத்தால் தர்மம் என்றும். உண்மையில், தானம் என்பது வேறு, தர்மம் என்பது வேறு. தானம் என்பது பிறருக்குக் கொடுப்பது. தர்மம் என்பது கடமைகளைச் செய்வது.

மனிதனாகப் பிறந்த ஒருவன், தனி மனிதனாகவும், குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும், தொழிலுக்கும், நாட்டிற்கும் என பல்வேறு விதமான கடமைகளுக்குட்படுகிறான்.

அதாவது, ஒரு மகனாக பெற்றோருக்கும், முன்னோருக்கும் ஆற்ற வேண்டிய கடமை, பெற்றோர் மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமை, கணவன் மனைவிக்கு ஆற்ற வேண்டிய கடமை, மனைவி கணவனுக்கு ஆற்ற வேண்டிய கடமை, சகோதர, சகோரிகளுக்கு ஆற்ற வேண்டிய கடமை, உற்றார், உறவினர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை, நாம் பிறந்த குலத்திற்கு ஆற்ற வேண்டிய கடமை, தொழில் செய்யும் இடத்தில், முதலாளி தொழிலிக்கும், தொழிலாளி முதலாளிக்கும் ஆற்ற வேண்டிய கடமை, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய கடமை, மாணவர் – ஆசிரியர்களுக்குள்ளான கடமை, நட்புக்கு ஆற்ற வேண்டிய கடமை என கடமைகள் பல பரிமானங்களில் உள்ளன. இது பற்றி நமது இந்து தர்ம நூல்களில் விரிவாகவும் விளக்கத்துடனும் தெரிவித்துள்ளன.

அந்த வகையில், பொருளாதார தர்மத்தை விளக்கும் நூலான அர்த்த சாஸ்த்திரத்தில், ஒரு குடும்பத் தவைலன் தான் ஈட்டும் பொருளை ஆறு பிரிவுகளாக பிரித்து, அந்த ஆறில் ஒரு பகுதி தானத்திற்காக ஒதுக்க வேண்டும் என்று கூறுகிறது. அதாவது, தானத்திற்காக ஒரு பகுதியை ஒதுக்கும் செயலை தர்மம் என்கிறது. இதனை நாம் குழப்பிக்கொண்டு, பிறர் கேட்டு நாம் அளித்தால் அது தானம் என்றும், கேட்காமல் அளித்தால் தர்மம் என்றும் புதிய கதையை கட்டுகிறோம்.

கேட்டு அளித்தாலும், கேட்காமல் அளித்தாலும் தானம் தானம் தான். பெயர் வேரில்லை. தர்மம் தவறுவது என்பது, கடமை தவறுவது என்பதாகும். இன்று, நாம் செய்யும் தொழிலைத்தான் கடமை என்று கருதுகிறோம். கடமை என்பது, நாம் சார்ந்த, சுற்றதோடு தொடர்புடைய அனைத்திலும் நமக்கான பங்களிப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. அதுவே நமது கடமையாகும். அதைப்பின்பற்றுவதே தர்மமாகும் என்பதை புரிந்துகொள்வோம். செயல்படுவோம்.




ரோட்டரிகிளப் ஆப் மதுரை சங்கமம் 2023–24 தலைவராக சேம்பர் சிறப்பு அழைப்பாளர் **திரு. B.S. ராஜன்** அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார். உடன் சேம்பர் முன்னாள் தலைவர் **திரு. E.R. குமரேசன்** அவர்கள்

# கேள்வி - பதில் போட்டி

இந்த கேள்வி பதில் போட்டியில், சரியான விடையளிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசளிக்கப்படும். கீழ்காணும் கேள்விகளுக்கான தங்களின் பதிலை எழுதி புகைப்படம் எடுத்து, **93441 97952** என்ற எண்ணிற்கு வாட்ஸ்ஆப் செய்யவும். பிரதி மாதம் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் சேம்பர் வர்த்தக கூட்டத்தில் அங்கத்தினர்கள் முன் அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

1. பிஸினஸ் மந்த்ராஸ் – தொழில் தர்மம் என்பதில் முக்கியமாக பின்பற்ற வேண்டியது?

........................................................................................................

2. எஸ்.சி.சி. தொழில் வர்த்தக கண்காட்சி 2023 – நடைபெறும் இடம்?

........................................................................................................

3. உலக கைத்தறி தினம்?

........................................................................................................

4. தெரு ஓரங்களில், கைத்தறிப் பாவு நீட்ட உரிமையை மீட்டுத் தந்தவர்?

........................................................................................................

5. டிரெட்ஸ் – எம்.எஸ்.எம்.இ. நிறுவனங்கள் எத்தனை சதவீதம் கடனாகப் பெறலாம்?

........................................................................................................

| | |
|---|---|
| முதல் பரிசு ரூ. 500/- | பெயர் :........................................................ |
| | தொழில்:........................................................ |
| இரண்டாம் பரிசு ரூ. 300/- | தொலைபேசி எண்:........................................................ |
| | சேம்பர் உறுப்பினரா?: ஆம் / இல்லை ........................................ |
| மூன்றாம் பரிசு ரூ. 200/- | இருப்பிடம்:........................................................ |

## CONGRATULATIONS!!!...

| சென்ற மாத கேள்விக்கு சரியான விடை அளித்து குலுக்கல் முறையில் வெற்றி பெற்றவர்களுக்கு கிடைக்கும் பரிசுகள் | | |
|---|---|---|
| | முதல் பரிசு ரூ. 500/- | திரு. டி.எஸ். தனிஷ்கா<br>அக்கவுண்ட்ஸ்<br>முனிச்சாலை / 90926 26487 |
| | இரண்டாம் பரிசு ரூ. 300/- | திரு. டி.ஆர். விஜயகுமார்<br>கார் ஒர்க் ஷாப்<br>மேல வடம் போக்கி / 93452 20725 |
| | மூன்றாம் பரிசு ரூ. 200/- | திரு. டி.என். கோபிநாத்<br>ப்ரிண்ட் ப்ளேயர் ஆப்செட்<br>வண்டியூர் / 98423 96796 |

அதிர்ஷ்டசாலிகள் நேரில் வந்து பரிசை பெற்றக்கொள்ளவும்

## திருக்குறள்

**வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பில் தலைப்பிரிதல் இன்று**

**பொருள்:** (கோடானுகோடி வருவதானால் மட்டுமல்ல, உள்ளதெல்லாம் போய்விட்டாலும்) பிறருக்கு கொடுக்கக்கூடிய செல்வநிலை மிகவும் குறைந்துவிட்ட காலத்திலும் பரம்பரைப் பொருமையுள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தம்முடைய நற்குணங்களை விட்டுவிடமாட்டார்கள்.

அதிகாரம் 96 குடிமை (நல்ல குடிபிறப்பு) ஒழிபியல்

சௌ. சேம்பர் குறித்து கருத்து தெரிவிக்க **93441 97952**



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award
www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

Your Name is Your Life

'ஷர்வ ரக்சன்' MRS
Best Numerologist

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட'
முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்



MANTHRALAYAM 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road
Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai

For Appointment
98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





# ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj**


RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*









# மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



# உமா நகர்

அரசு அனுமதி பெற்ற வீட்டி மனைகள் விற்பனைக்கு

DTCP APPROVED

தொடர்புக்கு: திரு. S.A. உதயகுமார் நிறுவனர்

**U K ஹோம்ஸ் & பிளாட்ஸ், மதுரை – 625012 +91 99659 81810**

**வளர்ச்சி பெறும் திருமங்கலம்**

- மெட்ரோ ரயில் முதல்கட்ட பணிகள்ஆரம்பம்
- ரயில்வே மேம்பாலம் முதல்கட்ட பணிகள் ஆரம்பம்
- அமையவிருக்கும் எய்ம்ஸ் அருகிலுள்ள டவுன்ஷிப் திருமங்கலம்
- எங்கள் மனைப்பிரிவில் இருந்து 6கி.மீ., தொலைவில் கப்பலூர் ZOHO IT கம்பெனி அமைகிறது.
- மனைபிரிவிலிருந்து சிறிது தொலைவில் மெட்ரோ ரயில் ஸ்டேஷன் அமையும் வாய்ப்பு.

*நாளிதழ்களில் வரும் தகவல்கள் படி.

முகவரி: P.K.N. வித்யாலயா பள்ளி(CBSE) எதிர்புறம், வடகரை, திருமங்கலம் – 625 706. பஸ் ரூட்: 37B / பஸ் ஸ்டாப்: PKN கல்லூரி

எங்கள் லே–அவுட், திருமங்கலம் நகர் பகுதியில் இருந்து 3 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது.

info@onvgprint.com

+91 95 97 775 775

FOLLOW US ON

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

**visit : www.onvgprint.com**

# onVGPrint.com

— A unit of VIGNESH GRAPHICS —

79-A, South Marret Street, Madurai - 625 001. | 33, Manjanakara Street, Madurai - 625 001. | 48/5, TNHB Colony, Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.07.2023 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

**UG CHEMI JAGSAN**

**U G கெமி ஜாக்சன்**



(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



**வேல் மருத்துவமனை**

**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com



24hrs Service

**Dr. K.N. சுப்ரமணியன்** MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.




சிறப்பம்சங்கள்

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள் » மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

» மூட்டு நுண்துளை சிகிச்சை » விபத்து அறுவை சிகிச்சை
» முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை » விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

**கைத்தறியில் ஓர் புதுமை**

**Electronic Jacquard**




**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



**Applications :**
• Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
• Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

**SRE CORPORATION**

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com

T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**

136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952

Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org